DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi**.M. Mayadevi,B.A., L.L.B.,
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | STC.No. 597/2025 |
| Deposition of Witness for Prosecution | PW:1 |
| Cr.No. and Police Station : | |
| Name: | **திரு. அருள்செல்வி** |
| Father's /Husband Name: | க.பெ. சந்திரசேகர் |
| Village: | சேத்தியாதோப்பு |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 4.08.2026** | |

Accused present.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.A படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் நான் இல்லத்தரசி ஆவேன். என் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு தற்போது வீட்டில் உள்ளார். தற்போது எனது கணவருக்கு எந்த வேலையும் இல்லை என்றால் சரிதான். என் கணவர் சம்பளத்தில் தான் நான் குடும்பம் நடத்துகிறேன் என்றால் சரிதான்.எனக்கு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 2017 ம் ஆண்டு. எதிரியை நான் வழக்கிற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நீதிமன்றத்தில் வழக்கு போடுவதற்கு முன்பு நான் எதிரியை எங்கு, எப்போது பார்த்தேன் என்றால் தேதி நினைவில்லை. நிறைய நிகழ்ச்சிகளில் பார்த்துள்ளேன். அவரது கணவரும் எனது கணவரும் வெளிநாட்டில் ஒன்றாக வேலை பார்த்தவர்கள். எதிரியின் கணவர் என்னவேலை பார்த்து வருகிறார் என்றால் என்ன வேலை என்று தெரியாது. ஆனால் எதிரி யின் கணவர் என் கணவருடன் வெளிநாட்டில் ஒரே அறையில் 10 வருடம் வசித்து வந்துள்ளார். எதிரியை எனக்கு யார் அறிமுகம் செய்து வைத்தார்கள் என்றால் அவரது கணவரும், எனது கணவரும் ஒன்றாக வேலை பார்த்த வகையில் எனக்கு தெரியும். திருமண நிகழ்ச்சிகள் அல்லாமல் வேறு எப்போதவது எதிரியை நான் நேரில் சந்தித்து பேசியுள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரியின் ஊருக்கு சென்றது இல்லை என்றால் சரிதான். எதிரியும் எனது வீட்டிற்கு வந்தது இல்லை என்றால் வந்திருக்கிறார் வந்து தான் என்னிடம் பணம் கேட்டார். காசோலை கொடுத்தார். எனது கணவரும், எதிரியின் கணவரும் வெளிநாட்டில்

வேலை செய்த காலத்தில் அவர்களுக்குள் கொடுக்கல், வாங்கல் இருந்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக எதிரியின் கணவர் என்னிடம் காசோலை கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணையின் தொடர்ச்சிக்காக மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-**Selvi**.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram